**வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலை - 2019**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொழிற்சாலையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொழிற்சாலை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொழிற்சாலையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தொழிற்சாலையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொழிற்சாலையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொழிற்சாலையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொழிற்சாலைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொழிற்சாலையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொழிற்சாலையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தொழிற்சாலையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தி மற்றும் கம்பனியின் கணக்கு கொள்கை களின் பிரகாரம் இறுதி இருப்பு கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பெறுமதியில் கணிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத | கந்தளாய் சீனி நிறுவனம் 1994.03.31 ஆந் திகதி ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கி சேவையிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் இல்லாதிருந்தமையால் இருப்பு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 1997 ஆம் ஆண்டில் வருகை | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இருப்பு பெறுமதியிட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 47,440,818 இருப்பு மீதி வருடாந்த இருப்பு மெய்மை ஆய்வு மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி கணிப்பீடு செய்யப்படாமல் கிரயத்தில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட் டிருந்தது. அவ்வாறே இதில் உள்ளடக்கப்பட்ட பயன்படுத்த முடியாத இருப்பு மீதி தொடர்பாக எந்தவொரு சீராக்கங்களும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 100,682 செலவு மீதியும் உள்ளடங்கியிருந்தது. | தந்த தலைவரால் சகல களஞ்சியங்களின் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு களஞ்சியம் சீல்வைத்து மூடப்பட்டிருந்தது. அதன் பின்னர் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் காலாவதியான இருப்பிற்காக பதிவழித்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஆ) | 25 வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்த மாக ரூபா 9,701,467 ஆன நானாவித முற்பண மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்த துடன் அந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்படவில்லை. இந்த மீதியில் அறவீடுகள் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டபோதும் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1994 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். இந்த மீதி தொடர்பாக முறையான தீர்மானம் எடுக்காமல் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த மீதியில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய முற்பணம் மற்றும் கரும்பு காணி கூறுடலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய முற்பணமாகும். இந்த நிறுவனம் மூடப்பட்டமையினால் அறவிடுவதற்கு முடியாத நிலைமை காணப்பட்டது. 1994 ஆம் ஆண்டு முதல் இதுவரை எந்தவொரு கடன் தொகையும் அல்லது முற்பணத் தொகையும் செலுத்தாதிருந்ததுடன் பியாணச் செலவின முற்பணமாக பெறப்பட்டவைகளும் தீர்த்துவைக்கப்படவில்லை. | 1994 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட அறவிட முடியாத முற்பணங்கள் தொடர்பாக முறையான மதிப்பீடு செய்து உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 76,352,246 மீதி காணப்பட்டதுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே முறையே ரூபா 23,244,703 தொகை, ரூபா 16,598,343 மற்றும் ரூபா 23,293,031 தீர்த்து வைக்கப்படாத முற்பணம், அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மீதி மற்றும் ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு மற்றும் பணிக்கொடைகளுக்காக செலுத்த | இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 76,352,246 தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அரசாங்க நிறுவனம் ஒன்றாக இருந்தமையால் அமைச்சு செயலாளரினால் தீர்மானத்திற்கு உடன்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 23,244,703 தொகை 1993 ஆம் ஆண்டிற்கு முன் காணப்பட்ட மீதியாகும். 1993 ஆம் ஆண்டின் பின்னர் பிரதேச கொள்வன வுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேச | செலுத்த வேண்டிய மீதிகளை உரியவாறு மதிப்பீடு செய்து தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மீதியில் காணப்பட்ட போதும் அந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றுகளுடன் காலப் பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் செலுத்துதல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்ட போதும் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரீதியில் கொள்வனவுகள் மேற்கொள் ளப்படவில்லை. ரூபா 16,598,343 கந்தளாய் நிறுவனம் உடைந்த இரும்பு விநியோகித்தலின் போது அந்த நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட மேலதிக தொகையாகும். ரூபா 20,330,623 தற்போது சேவையில் இருக்கின்ற 34 உத்தியோகத்தர்க ளின் மற்றும் மரணமடைந்த 03 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய பணிக்கொடைப் பணமாகும். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய மற்றும் முற் கொடுப்பனவு மீதியில் 25 வருடங்களுக்கு முன்னிருந்து காணப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 1,823,958 செலவு மீதி காணப்பட்ட போதும் அந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | இந்த செலவு மீதி 1994 ஆம் ஆண்டிற்கு முன் இருந்து கொண்டு வரப்படுகின்ற மீதியாகும். அந்த மீதி தொடர்பான சான்றுகள் சமர்ப்பிப் பதற்கு தேவையான ஆவணங்கள் நிறுவனத்தின் ஆவணக் காப்பகத்தில் அழிவடைந்திருந்தது. அந்த கணக்குகளின் செலவு மீதி ஏற்பட்டிருந்தமை கணக்குகள் உரிய வாறு பேணிச் செல்லாமையின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தது. | பெற வேண்டிய மீதிகளை உரிய வாறு மதிப்பிட்டு கணக்குகள் சரி செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 தொழிற்சாலையின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1957 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலை வருடாந்தம் சீனி மெற்றின்தொன் 16,320 வெள்ளப்பாகு மெற்றிக்தொன் 9,000 மற்றும் காய்ச்சி வடிகட்டிய மது லீற்றர் 3.9 மில்லியன் உற்பத்தி இயலளவைக் கொண்டிருந்தது. தொழிற்சாலையின் நிர்வாகத்தில் மற்றும் செயற்பாடுகளில் காணப்பட்ட அதிகளவான செயற்திற னின்மை மற்றும் மோசடிகளாக விடயத் தின் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டின் போது 1,133 ஆன ஊழியர்களுக்கு பணிக்கொடை செலுத்தி சேவையிலிருந்து முடிவுறுத்தப்பட்டதுடன் அன்று தொடக்கம் எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைகளும் காணப்படாமல் தொழற்சாலை மூடப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது தொழிற்சாலையின் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு இரண்டு தனியார் கம்பனிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் இந்த | உரிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் 2021.08.18 ஆந் திகதி 02 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் எதிர்காலத்தில் முழுமையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. | முறையான உடன் படிக்கையின் அடிப்படையில் தொழிற்சாலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அறிக்கை விநியோகிக் கின்ற திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தமையால் இந்த தொழிற் சாலையின் தொடர்ச்சியான இருப்பு நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2023 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 பெப்ரவரி 01 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சினால் நிதிக் கூற்றுக்கள் பரீட்சித்து 2023.02.01 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இந்த நிறுவனம் உற்பத்தி நடவடிக்கைகள் இன்றி மூடப்பட்டுள்ளது. | தொழிற்சாலையின் ஊழியர்களின் சேவை முடிவுறுத் தப்பட்ட போதும் முறையான பிரகாரம் அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள் தீர்த்துவைத்து கலைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையினால் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8.65 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13.19 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் பற்றாக்குறை ரூபா 4.54 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திறைசேரி மானியம் ரூபா 6.28 மில்லியனால் அதிகரித்தமை இந்த பற்றாக்குறை குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| விடயம் | ஆண்டு | | முரண்கள் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | **2019** | **2018** | | சதவீதத்தில் |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| **வருமானம்** | | | | |
| திறைசேரி மானியம் | 10,701,472 | 4,419,695 | 6,281,777 | 142 |
| ஏனைய வருமானம் | 419,496 | 607,893 | 188,397 | 31 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாக செலவினம் | 19,762,322 | 18,217,602 | 1,544,720 | 8 |

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு சொத்து விகிதம் 0.61:1 மற்றும் 0.28:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதம் 0.63:1 மற்றும் 0.29:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1999 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையில் எந்தவொரு செயற்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப் படாதிருந்த போதிலும் சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பொது முகாமையாளரை உள்ளடக்கி கடந்த கால இழப்பீட்டை வழங்கி 34 ஊழியர்கள் தற்போதும் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் கடந்த 05 வருட காலத்தில் இந்த ஊழியர்களுக்கு சம்பளம், வேதனம், முற்பணம் மற்றும் சேமலான நிதியமாக முறையே ரூபா 61,369,907 தொகை, ரூபா 9,409,962 மற்றும் ரூபா 5,650,470 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடை பொறுப்புக்களும் ரூபா 20,881,623 ஆக காணப்பட்டது. | முகாமைத்துவம் கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. | சிக்கனமற்ற செலவினங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும். |